# IV. ஆளணி

ஆளுநர் திரு. எச். ஈ. தென்னக்கோன், தென் கிழக்கு ஆசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்களுக்கான ஏழாவது மாநாட்டிற் கலந்துகொள்வதற்காக 1972 பெப்புருவரி 5ஆந் திகதி மலேசியாவுக்குச் சென்று, 1972, பெப்புருவரி 13ஆந் திகதி இலங்கை திரும்பினர்.

அவுத்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் 1972, ஏப்பிறல் 11 ஆந் திகதி அவுத்திரேலியா சென்ற ஆளுநர் 1972, மே 2ஆந் திகதி இலங்கை திரும்பினர். வெளிநாட்டில் அவர் தங்கியிருந்தபோது அவுத்திரேலியாவின் வங்கியியல், நிதியியல் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நிகழ்த்தினர்.

1972, மே 25ஆந் திகதி ரோக்கியோவில் நடைபெற்ற ஆசிய உற்பத்தி அமைப்பின் ஆளுமைக் குழாத்தின் பதினலாம் அமர்வில் கலந்துகொண்டு 1972, யூன் 11ஆந் திகதி இலங்கை திரும்பினர்.

பன்னுட்டு நாணய நிதியில் இலங்கையின் மாற்றுப் பதில் ஆளுநரான ஆளுநர், பன்னுட்டு நாணய நிதியினதும், பன்னுட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் இலங்கை ஆளுநரான நிதியமைச்சர் கலாநிதி என். எம். பெரேராவுடன் வாசிங்டனில் நடைபெற்ற பன்னுட்டு நாணய நிதியினதும் பன்னுட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இவர் 1972 செத்தெம்பர் 16ஆந் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டு 1972 ஒற்ரோபர் 14ஆந் திகதி திரும்பினர்.

ஆளுநர் இல்லாதிருந்த 1972 பெப்புருவரி 5இலிருந்து 13 வரையான காலப்பகுதியில், துணை ஆளுநர் கலாநிதி டபிள்யூ. எம். திலகரத்தின மூத்த துணை ஆளுநர் பதவியிலமர்த்தப்பட்டு, நாணய விதிச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் நியதிகளிற்கமைய வங்கியின் முக்கிய நிறைவேற்று அலுவலராகக் கடமைபுரிந்தார். கலாநிதி திலகரத்தின 1972, ஏப்பிரல் 7ஆந் திகதி தொடக்கம் மூத்த துணை ஆளுநர் பதவியிலமர்த்தப்பட்டு, இலங்கை உதவிக் குழாத்தின் 8வது கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பாரிசுக்கும், இலண்டனில் நடந்த பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்கும் சென்ற 1972, மே 25 தொடக்கம் 31 வரையான காலப்பகுதி நீங்கலாக, ஆளுநர் வெளிநாட்டிலிருந்த காலம் முழுவதிலும் முக்கிய நிறைவேற்று அலுவலராகக் கடமையாற்றினர். இவர் 1972, நவெம்பர் 1ஆந் திகதி தொடக்கம் பன்னுட்டு நாணய நிதியின் மாற்றுப்பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் கடமைகளைக் கையேற்ருர்.

நிதியமைச்சின் செயலாளர் திரு. சி. ஏ. கூறே, பன்னாட்டு நாணய நிதியினதும், பன்னாட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து வெளியே சென்றிருந்த காலத்தில் நிதியமைச்சின் பதில் செயலாளர் திரு. எல். பி. அபயரத்தின நாணயச் சபையில் அலுவலகக் கடமை சார்ந்த உறுப்பினராகக் கடமையாற்றினார்.

துணை ஆளுநர் கலாநிதி காமினி கொரியா ஆண்டு முழுவதும் விடுப்பில் நின்றார். இக்காலத்தில் கலாநிதி கொரியா சசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி ஆய்வுகள் நிறுவனத்தில் பகுதிநேர உறுப்பினராகவிருந்தார். 1972, மாச்சு, ஒற்றோபர் மாதங்களில் இவர் ஐக்கிய நாடுகளின் கொக்கோ மாநாட்டின் எந்நாட்டையும் சாராத தலைவராகவும், 1972 ஏப்பிறலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டமிடற் குழுவின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1972, யூனில் ஐக்கிய நாடுகளில் மானிடச் சூழல் மாநாட்டில் மாநாட்டின் தலைமைப் பொதுச் செயலாளருக்கு மூத்த மதியுரையாளராகக் கலந்துகொண்டார். இவர் மேலும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் ''அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த நோக்கு'' பற்றிய செயற்றிட்டத்தில் அறிவுரையாளராகவும் கடமையாற்றினார். 1972, நவெம்பரில் ஒருங்கிணைந்த நோக்கினூடாக அபிவிருத்தியடையப் பணிபுரியும் ஐக்கிய நாடுகளின் வல்லுனர் குழாத்தின் உறுப்பினராகக் கடமையாற்றினார். 1972, திசெம்பரில் அவர் அபிவிருத்தியடையும் இரண்டாவது பத்தாண்டில் ஆசிய நிலப்பரப்பின் முன்னேற்றத்தை மதிப்பிடும் ஆசிய தூர கிழக்கு நாடுகளின் பொருளாதார ஆணைக் குழு வல்லுநர் குழாத்தின் தலைவராகக் கடமையாற்றினார்.

ஆளுநரின் மூத்த உதவியாளரான திரு. பி. வி. எம். பர்ணந்து, நாணயவிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கமைய 1972 ஏப்பிறல் 16 ஆந் திகதியிலிருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார். ரோக்கியோவில் நடைபெற்ற ஆசிய உற்பத்தி அமைப்பில் ஆளுமைக் குழாத்தின் பதினான்காவது அமர்வில் கலந்துகொள்வதற்காக 1972, மே 25ஆந் திகதி ஆளுநர் வெளிநாடு சென்றிருந்த காலப்பகுதியிலிருந்து. கலாநிதி திலகரத்தின அவர்கள் பாரிசில் நடைபெற்ற இலங்கை உதவிக் குழாத்தின் 8 ஆவது கூட்டத்திலும், இலண்டனில் நடைபெற்ற பேச்சுக்களிலும் கலந்துகொண்டு 1972, மே 31ஆந் திகதி இலங்கைதிரும்பிவரும்வரையும், திரு. பர்ணந்து அவர்கள் மூத்த துணை ஆளுநராக நியமிக்கப்பட்டு, நாணயவிதிச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் நியதிக்கமைய வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகக் கடமையாற்றினார்.

முதன்மைக் கணக்காளர் திரு. க. குணரத்தினம், அவர்கள் 1972 செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் ஆளுநரின் உதவியாளராக நியமிக்கப்பட்டார்.

துணை முதன்மைக் கணக்காளர் திரு. ஏ. பண்டாரநாயக்க, 1972 செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து பதில் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப் பட்டார்.

திரு. ரி. எஸ். முத்துலிங்கசாமி, 1972, யூன் 21 ஆந் திகதியிலிருந்து மதியுரையாளராக (பயிற்சி) நியமிக்கப்பட்டார்.

திரு. சு. தயாநிதியும், திருமதி. ஏ. எச். டி. சில்வாவும் பன்னாட்டு நாணய நிதியில் தொடர்ந்தும் பணியாற்றுவர்.

திரு. பி. பி. டி. எம். பெரேரா அவர்கள் சவுதி அரேபியாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அவையில் தொடர்ந்தும் பணியாற்றிவருகின்றார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்ட திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன, 1972. ஒற்றோபர் 1ஆந் திகதி தொடக்கம் மீண்டும் வங்கிப் பணியை ஏற்றார். தாம் விடுவிப்பிலிருந்த காலத்தில் நிலச் சீர்திருத்தக் குழுவின் உறுப்பினராக இவர் நியமிக்கப்பட்டிருந்தார். வங்கியில் தமது பணியை மீண்டும் ஏற்ற பின்னரும், அவர் இப்பதவியில் தொடர்ந்தும் செயலாற்றி வருகின்றார்.

நிதியமைச்சுக்கு விடுவிக்கப்பட்ட திரு. பி. சி. முனசிங்க, 1972, யூலை 1ஆம் திகதி மீண்டும் வங்கிப் பணியை ஏற்றார்.

கலாநிதி ஜி. உஸ்வத்த ஆராச்சி, ஐக்கிய நாடுகள் அவையில் தொடர்ந்தும் பணியாற்றுகிறார்.

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட கலாநிதி எஸ். ரி. ஜி. பர்ணாந்து, 1972, ஒற்றோபர் 1ஆந் திகதி தொட்டு வங்கிப் பணியை மீண்டும் ஏற்றார். விடுவிக்கப்பட்ட காலப்பிரிவில் முகவர் நிலையங்கள் மீதும் தரகர் நிறுவனங்கள் மீதும் விசாரணை நடாத்த அமைக்கப்பட்ட ஆணைக் குழுவின் ஓர் உறுப்பினராக இவர் நியமிக்கப்பட்டார். வங்கியில் தம் பணியினை மீண்டும் தொடங்கிய பின்பும் இப்பதவியில் தொடர்ந்தும் இருந்தார்.

மீளப்பார்வையிடும் இவ்வாண்டில் மத்திய வங்கியின் பின்வரும் அலுவலாளர்கள் அரசாங்கத்திலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் முழு நேரமும் பணியாற்ற விடுவிக்கப்பட்டார்கள்.

திருவாளர்கள் எச். ஆர். டி. சொயிசா, எச். எம். ஆர். எல்லப்பொல, பி. எம். நாகாவத்த ஆகியோர் - நிதியமைச்சில்.

கலாநிதி என். இராமச்சந்திரன் (வங்கிப் பணியில் இருந்து விலகிய நாள் வரை-1972.3.30 வரை), திரு. என். எம். கப்பாகொட, கலாநிதி எஸ். எம். பி. சூரியாராச்சி, திரு. பி. எம். கசன் ஆகியோர்-திட்ட வேலை வாய்ப்பு அமைச்சில்.

திரு. பி. எச். சிறிவர்த்தன-பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

திரு. பி. பீ. கரந்தவெல-கப்பல் சுற்றுலா அமைச்சு.

திரு. ரி. ஜி. புஞ்சி அப்புகாமி-அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்.

திரு. வி. என். டீ. நாணயக்கார-கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சு.

கலாநிதி ஆர். சீ. வணிகதுங்க-பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.